# வேலையில்லாப் பட்டதாரிகள் வளமாக வாழ ஏன்ன செய்யலாம்?



## தலைவராகலாம்

Nstarajan

# பதிப்பு விவரம்:

Title

**வேலையில்லா பட்டதாரிகள்,**

**தலைவராகலாமே!**

Genre:

**இந்திய அரசியல்**

Year of Publicaion:

**2019**

Author

**நடராஜன் நாகரெத்தினம்**

**எச்சரிக்கை**

**இந்த புத்தகத்திற்கு இரண்டு முகவுரைகள்**

1. **பரிதாபத்திற்குரிய பட்டதாரிகளே!**

2. **நம் நாட்டின் நடந்தேறும் அரசியல் நாடகம் !!**

Contents


முகவுரை 01

முகவுரை 02

**PART I**

கல்வியும் வாழ்வாதாரமும்

கல்வி பெற்ற எல்லொருக்குமே வேலை ஒன்று கிடைப்பதில்லை!

PART II

- நல்லவர் பலர் தலைவர்களானால் நமது நாட்டில் என்ன மாற்றங்கள் வரும்?

☐ கல்வியில் சிறந்தவர், ஒரு நல்ல தலைவராவது சுலபமே.

☐ ஒரு தலைவராக, வேலையில்லா பட்டதாரி தெரிந்து கொள்ள வேண்டியவை, என்னென்ன?

☐ நல்ல – கெட்ட தலைவர்களை .அடையாளம் தெரிந்து கொள்வது எப்படி?

☐ தலைவராக ஒரு நரியின் மனம் வேண்டும்.

PART III

உயர் கல்வி பெற்ற பட்டதாரிகள் நல்ல தலைவராகலாம்

## முகவுரை 01

## முகவுரை 02

## PART I

**அத்தியாயம் 01:** நாடும் நாட்டு மக்களும் நலம் பெற என்ன செய்யவேண்டும்?

**அத்தியாயம் 02:** இட ஒடுக்கீடு! தலைவர்கள் ஏமாற்றுகிறார்கள்; மக்களோ ஏமாறுகிறார்கள்!

**அத்தியாயம் 03:** வேலை வாய்ப்பு குறைவது எதனால்?

**அத்தியாயம் 04:** பட்டதாரிகள் வேலை தேடுவதேன்?

**அத்தியாயம் 05:** சில உண்மைக் கதைகள்:

**அத்தியாயம் 06: கல்வியும் செல்வமும்**

# PART II

## வேலை இல்லாப் பட்டதாரிகள் வருங்காலத் தலைவர்கள்!

- ☐ நல்லவர் பலர் தலைவர்களானால் நமது நாட்டில் தேவையான மாற்றங்கள் வரும்
- ☐ கல்வியில் சிறந்தவர், ஒரு நல்ல தலைவராவது சுலபமே.
- ☐ ஒரு தலைவராக, வேலையில்லா பட்டதாரி தெரிந்து கொள்ள வேண்டியவை, என்னென்ன?

☐ நல்ல – கெட்ட தலைவர்களை அடையாளம் தெரிந்து கொள்வது எப்படி?

☐ தலைவராக ஒரு **நரியின்** மனம் (சிந்தனைத் திறன்) வேண்டும். நரியின் **குணம் இல்லை.**

## முகவுரை 01

### 1. பரிதாபத்திற்குரிய பட்டதாரிகளே,



**கல்வியும் வேலை வாய்ப்பும்**

நீங்கள் வளமாக வாழ, நீங்களும் உங்கள் பெற்றோரும் பல கனவுகள் கண்டுவந்தீர்கள்.

பெற்றோரோ, இருப்பதை விற்று கடன் பல வாங்கி, பள்ளி யூனிபார்ம், சூ, மற்றும் பலவேறு

கட்டணங்களையும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் தண்ணீராய் செலவு செய்தார்கள்.

பட்டம் பெற்றீர்கள். பட்ட மேல் படிப்பு என்றெல்லாம் உயர்கல்வி பெற்றீர்கள்.16 முதல் 20 வருடங்களை பள்ளிகளில் கழித்தீர்கள்.

இவற்றை எல்லாம் தாண்டி, **ஓகோ** என்று இல்லாவிட்டாலும், **ஓக்கே** என்ற வேலை எதுவும் கிடைத்ததா? இல்லையே!

பொல்லாத தலைவர்கள் **ஜாதியின்** அடிப்படையில் வேலைக்கு **இட ஓதுக்கீடு** தந்தோம் என்று சொன்னார்கள். அதனால் உங்களுக்கு வேலை ஒன்று கிடைத்து, வாழ்க்கை வளமாகும் என்று நம்பினீர்கள். இட ஒதுக்கீட்டினால், ஜாதியைச் சேர்ந்த அனைவருக்கும் வேலை கிடைக்குமா? சிந்தித்துப் பார்க்கவேயில்லை.

புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாக வாக்குறுதி தந்து, ஓட்டு வாங்க்கினார்கள். ஆனால் உள்ள வேலைகள் பல மறைந்து விட்டனவே!!

**வேலை இல்லாவிட்டால் என்ன?**

பிழைப்புக்கு என்ன செய்வோம்? வழியா இல்லை? வேலையில்லாத பட்டதாரிகள் ஒரு **அரசியல் தலைவராக** வளரலாமே!

அரசியல் தலைவரின் வருமானம் எவ்வளவு? வெற்றிகரமாக தலைவராவது எப்படி என்ற பல நுணுக்கங்களை வரும் அத்தியாயங்களில் அலசுவோம்.

இப்போது சில உண்மைகளை அலசுவோம்.

**.1. படித்துப் பல பட்டங்கள் பெற்றவர்க்கு எல்லாம் வேலை வாய்ப்பு உள்ளதா?**

இந்தக் கால கட்டத்தில் நமது நாட்டில், மக்கள் மிகவும் துன்பப்பட பல காரணங்கள் உண்டு!

அதில் கிட்டத்தட்ட **வாலிபர்** முதல் **நடுவயது** வரை துன்புருவது, அதிக அளவிலே, **வேலை இல்லாத திண்டாட்டம் என்ற** ஒரு காரணத்திற்காகவே!

ஒரு காலத்தில் ஒருவர் ஒரு தனியார் அல்லது அரசு நிறுவங்களின் வேலைக்குச சேர்ந்தால் ரிடையராகும் வரை அதில் தொடர்ந்து வேலை செய்வார்கள்.




நிறுவனத்தை திடீரென்று மூடுவது, அதனால் வேலையை இழப்பது மிகவும் குறைவு.

**.2.** இன்**றைய வாழ்க்கை: ஒரு பாம்பு ஏணி விளையாட்டு**

ஒரு காலத்தில் **சிவராத்திரி** அன்று இரவிலே விழித்திருப்பதற்கு என்று, **பாம்பு ஏணி** விளையாட்டு பயன்பட்டது.

தற்காலத்தில் இந்த பாம்பு ஏணி விளையாட்டு மறைந்துவிட்டது,

தற்காலத்தில், விரைவாக **வருமானத்திலும், பதவியிலும்** வளர்வதும், திடீரென்று ஒருநாள்**வேலையை இழந்து** பலகாலம் தவிப்பதும் ஒரு அன்றாட நிகழ்ச்சி ! இந்த பாம்பு - ஏணி விளையாட்டு நமக்கு, வாழ்வின் ஒரு பெரிய உண்மையை உணர்த்தும்.

இதை விடக்கொடுமை, பல பட்டங்கள் பெற்றும் வேலை தேடியே, வயது முதிர்ந்து, வாழ்க்கையை முடிக்கும் மக்கள் தொகை வளர்ந்து வருகிறது.




வேலையில்லாக் காரணங்களையும், வேலை கிடைக்காத பட்டதாரிகள் என்ன செய்துவாழலாம் என்றும் அலசுவோம்.

சுயமாக ஒரு தொழில் செய்து பிழைக்கலாம் என்றால் அதற்கும் பல இடையூறுகளைத் தாண்டவேண்டும்.

வேலை ஒன்றைத் தேடியே வாழ்கையை வீணடிக்காமல், சுயமான ஒரு முயற்சியில் **வளமாக**

**வாழ** என்ன என்ன செய்யலாம் என்பது பற்றி அலசலாம்.

### முகவுரை 02

## நம் நாட்டில் நடந்தேறும் அரசியல் என்னும் நாடகம்

நமது நாட்டின் அரசியல் கட்சிகள் இயங்குவதை அலசுவோம்.



நமது நாட்டை ஆண்டுவந்த ஆங்கிலேயர் சென்று 70 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் ஆங்கில ஆட்சியின் துயரங்கள் இன்றும் தொடர்கின்றன.

1. **நாடு அடைந்த சுதந்திரம், இன்றுவரை நாட்டின் மக்களை அடையவில்லை:**

நமது நாடு 200 ஆண்டு காலம் ஆங்கிலேய அரசின் அடிமை நாடாக இருந்து வந்தது.

நல்ல பல தலைவர்கள் வழிகாட்ட. பல லட்சம் மக்களின் தியாகத்தினால் நம் நாடு விடுதலை பெற்றது.

சுமார் **70** வருடங்களாகியும், **விடுதலையின் பலன்** பொது மக்களை இன்றும் அடையவில்லை. இன்றும் அன்றைய ஆங்கிலேயர் ஆட்சி போல நாடும் நாட்டு மக்களும் சுராண்டப்பட்டு வருகிறார்கள்.

2. **அன்னிய ஆட்சியாளர் துவக்கிவைத்த சுரண்டல்கள் இன்றும் நிற்கவில்லை:** அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் **ஜமீந்தார்கள்** என்னும் ஒரு சிறு கூட்டத்தின் உதவியால் நம் நாட்டின் செல்வத்தை சுரண்டி தமது நாட்டிற்கு கடத்தினார்கள்.

இன்று ஜமீந்தார்கள் இல்லை. மாறாக - **CRONY** – பெரும் **தொழிலதிபர்கள்**, பெரும் வியாபாரிகள் உதவியோடு நமது நாடு சுரண்டப்பட்டு, அந்தச் செல்வம் நாட்டு எல்லைகளைக் கடக்கிறது.

இன்றும், மக்கள் ஆட்சியிலே, சட்ட ரீதியாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் செல்வம் கடத்தப்படுவது தொடர்கிறது.

3. **பிரித்து ஆளும் பிரிட்டிஷ் தந்திரம் நின்றபாடில்லை:** அன்றும் இன்றும், ஆட்சியாளர்கள், நம்மை ஜாதி மதம் மொழி என்றல்லாம் **பிரித்து** நம்மிடையே வெறுப்பையும் விரோதத்தையும் வளர்த்து நம்மை ஆள்கிறர்கள்.

(ஒரு நாட்டின் ஆட்சிக்கும் சாதி மதத்திற்கும் என்னதொடர்பு)?

**ஏன்?**

“**ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்”** என்ற ஒரு பழமொழியின் விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். **மக்களை பிரித்துவிட்டால், அவர் தம்மில் சண்டையிட்டுக் கொள்வார்கள்.** அப்பொழுது மக்கள் கவனம், ஆட்சியின் மேலோ, அல்லது, ஆட்சியாளர் மீதிருந்து விலகிவிடும். அந்த நேரம்

மக்களின் சொத்தைக் கொள்ளை கொள்வது எளிது.

4. **வறுமை வளர்கிறது**. சுமார் 70 வருடங்கள் முன்னால், நாட்டில் வறுமை மிகுந்திருந்தது. இன்றும் ஏழ்மை பெருமாளவில் தொடர்கிறது.

5. **நாட்டின் செல்வம், அன்று போல இன்றும் நாடு கடத்தப்படுகிறது:**
**ஸ்விஸ் பாங்க், சானல் ஐலேண்ட்**, மற்றும் இது போன்ற பல நாடுகளில், நமது நாட்டின் செல்வந்தர்கள், தொழில் துறை அதிபர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் கடத்திய செல்வத்தை செல்கிறது.
**ஆனால், வேலை வாய்ப்பு, மற்றும் நட்டின் தொழில் வளர்ச்சிக்கு, அன்னிய முதலீடு வேண்டும் என்று எல்லா தலைவர்களும் சொல்வார்கள்,**
செல்வம் நம் நாட்டை விட்டு வெளியேரும். அதற்கு வசதியாக பல சட்டங்கள். இது போதாதென்று **ஹவாலா** என்னும் ஒரு வசதி. கடத்திய செல்வம் பட்டியலிட்டு அவ்வப்போது பத்திரிக்கைகளில் வெளியாகிறது.

ன்இன்றுவரை எந்த அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. எதிர்க் கட்சிகள் இதை எந்த ஒரு மேடையிலும் எழுப்பவில்லை.

வேறு ஒரு தீவு நாட்டிலிருந்து நமது நாட்டின் (பங்குச் சந்தை) **ஸ்டாக் மார்கெட்** மூலம் நமது நாட்டின் செல்வம் **P-Note** என்னும், ஒரு உத்தி மூலம் கடத்தப்படுகிறது.
இதை எந்த ஒரு அரசியல் கட்சியும் தடுக்கவோ, விமரிசிக்கவோ இல்லை.

அரசியல் கட்சிகளும், ஊடகங்களும், அதிகாரிகளும் ஒன்று சேர்ந்ததால் தலைவர்கள் செய்யும் தவறுகள் சாதாராண மக்களின் கவனத்தை அடைவதில்லை.

6. **தேர்தல் நேரம்:**

தேர்தல் நேரத்தில் அனல் பரக்கும் பிரச்சாரங்களை ஒவ்வொரு அரசியல் கட்சியும் அரங்கேற்றும். அந்த நேரம் அவர்கள் ஒருவர் மீது

ஒருவர் சொல்லும் குற்றங்களெலாம் உண்மையே!

எதிர் கட்சி ஆளும் கட்சியாக மாறியதும், முந்தைய ஆட்சியில் நடந்த ஊழல்களுக்கு இந்த புதிய ஆட்சி தண்டிக்குமா?

அதை எதிர்பார்த்தால், நீங்கள் ஒரு **மாங்காய் மடையர்கள்.**

சமீபகாலத்தில் மத்தியில் ஆட்சிமாறுவதற்குக் காரணமாக இருந்தது முந்தைய ஆட்சியில் நிகழ்ந்த பலவேறு ஊழல் புகார்கள். புதிய ஆட்சி, அவற்றை வெளியே கொண்டு வந்து தண்டித்து. கொள்ளையடித்த மக்கள் பணத்தை மீட்கும் என்று நம்பியவர் ஏமந்தார்.

இந்தப் பிரச்சரங்களில், நாட்டின் உண்மையான பிரச்சினைகள் என்ன என்ன என்று எந்த ஒரு அரசியல் கட்சியும் விவாதிப்பதில்லை.

வளர்ந்த நாடுகளில் – விவாதம் (Debates) – டெலிவிஷன் மூலம் ஒளிபரப்பப்படும்.

ஜாதி, மதம் இனம் மொழி அரசியலில் விவாதிக்கப் படுவதில்லை.
ஊழலுக்கு தண்டனை உண்டு. தண்டனைகள் வெகு விரைவில் வழங்கப்படும்.

## அத்தியாயம் 01

## நாடும் நாட்டு மக்களும் நலம் பெற என்ன செய்யவேண்டும்?

**(1) சட்டங்களில் பல மாற்றங்கள் வேண்டும்.,**

வளர்ந்த நாடுகள் பலவற்றிற்கு இணையாக, நமது சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.

நமது சட்டங்கள், ஆட்சி முறை, நீதிதுறை, கல்வி, எல்லாமே துருப்பிடித்தது. நம் நாட்டைச் சுரண்ட வந்த **பிரிடிஷ்** ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டவை.

## Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below

Free-Ebooks.net